**துணை ஆணையாளர் –1 , உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திருமதி.மா.நாகம்மாள்.,**

செ.மு.ஆணை எண்.அ4/ 20879 /2023 நாள்: 10.05.2024

பொருள்: நியமனம் (நேரடி) – உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – நிர்வாகம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் பணித்தொகுதி–IV – (தேர்வு நடைபெற்ற நாள் 24.07.2022) – இளநிலை உதவியாளர் பதவிக்கு இரண்டாவது பட்டியல் பெறப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல்.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 1925/PSD-D2/2023, நாள்: 31.08.2023.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 453/PSD-B1/2023, நாள்: 27.12.2023.
3. துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ4/20879/2023, நாள்: 12.01.2024.

*****

**ஆணை:**

பார்வை–2ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின் வாயிலாக, இத்துறைக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி. S. நந்தினி என்பவருக்கு பார்வை–3ல் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக அம்பத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பதவிக்கு பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

தனியர் 21.02.2024 மு.ப அம்பத்தூர் மண்டலத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ளார். பணிநியமனம் வழங்கப்பட்டு இத்துறைப்பணியில் சேர்ந்து தனியரது பணி, இளநிலை உதவியாளர் பதவியில், 21.02.2024 மு.ப தேதியில், சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் பணித்தொகுதி–IV பணிநியமனம் குறித்த நிலுவைலுள்ள வழக்குகள் மற்றும் ரிட் மனுக்களில் பிரகடனப்படுத்தப்படும் தீர்ப்பு முடிவுகளுக்கு உட்பட்டு நிபந்தனை அடிப்படையில், பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV (Group IV)".

பணி வரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேலும், தகுதிகாண் பருவகாலத்திற்குள், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் நடைபெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

துணை ஆணையாளர் –1

13/5/24

பெறுநர்
திருமதி. S. நந்தினி,
இளநிலை உதவியாளர்,
அம்பத்தூர் மண்டலம்.
(உரிய அலுவலர் மூலமாக)

நகல்

1. முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் / இணை ஆணையாளர் அவர்களின் மேசைக்கு.
2. அனைத்து அலுவலர்கள்,ஆணையாளர் அலுவலகம்.
3. துணை ஆணையாளர் (ந) வடக்கு, சென்னை–05.
4. உதவி ஆணையாளர், அம்பத்தூர் மண்டலம்.
(சம்பந்தப்பட்ட பணியாளருக்கு சார்வு செய்து அவ்விவரத்தினை அசலாக அனுப்பிடவும், மேலும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு அவ்விவரத்தினை தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்).
5. ஆணையாளர் அலுவலக தகவல் பலகைக்கு.
6. ‘அ4’ இருப்பு கோப்பு